எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்

# நற்செய்தி



# முன்னுரை

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர,சகோதரிகளாகிய உங்கள் அனைவருக்கும் நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக..(கலா.,எபே.,பிலி.,1:2)

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.... (யோவான் 5:39) என்ற விசுவாசத்தோடு, இப்புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிற கர்த்தரின் சத்தியங்கள், வரவிருக்கிற இராஜ்யத்தின் மகிழ்ச்சியான செய்திகளை உள்ளடக்கியதும், இந்த சத்தியங்களை இதுவரை கேட்டிராதவர்கள் மனமகிழ்ச்சியும், சமாதானத்தையும் நிச்சயம் பெற்றுக்கொள்வார்கள் என்று உறுதியாக நம்பி ஜெபத்துடன் வெளியிடுகிறோம்.

இந்த புத்தகத்தை வாசிக்கும் வாசகர்களுக்கு வெளியீட்டாளராக நாங்கள் கூறிக்கொள்வது, "இன்றைய விசுவாசிகள், வேதவசனங்களையும், அதின் விளக்கங்களையும் புரிந்து கொள்ளுவதில் உண்டாகும் தவற்றுக்கு, அதை கவனத்துடனும், ஆவியோடும், நிதானமாக ஆராய்ந்து தியானிக்காமல் போவதாலேயே. எனவே, தாங்கள் கர்த்தருக்கென்று ஒதுக்கும் மிக முக்கியமான நேரத்தில் இதுபோன்ற புத்தகங்களை தியானிப்பது உங்களை சத்திய வெளிச்சத்தில் வழிநடத்தும்" என்று தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறோம்.

வேதாகமத்தை ஆழ்ந்து படித்து, கர்த்தர் மனுக்குலத்திற்காக வைத்துள்ள திட்டத்தையும், அதின் நிறைவேறுதல்களின் மெய்பொருள்களையும் அறிந்து கொள்ள விரும்புகிற தேவபிள்ளைகளுக்கு இந்த சிறு புத்தகம் நிச்சயம் ஒரு தூண்டுகோலாக உதவி புரியும் என்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

வேதாகம ஆதாரத்தை கொண்டு, பாவத்தினிமித்தம் தேவனுக்கும் மனிதனுக்கும் உண்டான பகைமையை நீக்கி, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் மீண்டும் மனிதன் அடையப்போகிற ஆசீர்வாதங்களை இங்கு விளக்கியுள்ளோம்.

மாசற்றவரான இயேகிறிஸ்து பெத்லகேமில் பிறந்து, எல்லோரையும் மீட்கும்படிக்கு பலியானார் (1தீமோ. 2:5,6) என்கிற பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படை கருத்தையே மறுக்கிற வேதவிமர்சகர்கள், பரிணாமவாதிகள், மற்றெல்லோருக்கும் சரியான விசுவாச கோட்பாட்டை மிக எளிமையாகவும், உறுதியாகவும் விளக்குவதாக இந்த புத்தகம் இருக்கும்.

இந்த புத்தகத்தை வாசிக்கும் யாவருக்கும் எங்களது மனமுவந்த வாழ்த்துக்கள்!

இங்ஙனம்,

**வேத மாணவர்கள்**
**வேலூர்**

# பொருளடக்கம்


**1 - 11**
இயேசு கிறிஸ்துவின் பிறப்பும், பலியும் பற்றிய தெளிவின்மை

**12 - 23**
தேவ சிருஷ்டிப்பில் முதல் மனிதனின் பரிபூரணமும், அவனது வீழ்ச்சியும்

**24 - 32**
ஆதாமின் மீறுதலினால் மனுக்குலம் இழந்த ஆசீர்வாதங்கள்

**23 - 36**
இரட்சிப்பின் திட்டத்தில் "மீட்கும் பொருள்"

**37 - 44**
எல்லோரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புகொடுத்த இயேசுகிறிஸ்து

**45 - 47**
இயேசுகிறிஸ்துவின் பலி – எல்லோருக்குமான ஜீவன் பெறும் உரிமை

**48 - 50**
எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்- நிறைவேறும் காலம்

**51 - 54**
வேதத்தில் சொல்லப்படும் ஆக்கினை - ஆசீர்வாதம்

**55 - 56**
சிந்திக்கும் கிறிஸ்தவர்களுக்கான அழைப்பு




## என்ன அந்த நற்செய்தி?

கிருபையிலும், அறிவிலும் வளர நினைக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு பெத்லகேமின் புல்வெளிகளில் தேவதூதர்களால் அன்று கூறப்பட்ட இந்த செய்தி மிகமிக விலையேறப் பெற்றது.

ஏனென்றால், பல ஆயிரம் வருடங்களுக்கு மேலாக தெளிவில்லாமல் காணப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்கள், நிறைவேற போகிறதை அறிவிப்பதாக அந்த நற்செய்தி இருந்தது.

நீங்கள் பலுகி பெருகி பூமியை நிரப்பி, அதை ஆண்டு கொள்ளுங்கள் (ஆதி. 1:28) என்று சொல்லி தேவன் ஆசீர்வதித்ததை அனுபவிக்க முடியாமல் பாவத்தில் மூழ்கியிருக்கும் மனுக்குலத்திற்கு விடுதலை கிடைக்க போகிறதை அறிவிக்கும்படியாக அந்த நற்செய்தி இருந்தது.










மரித்த எல்லாரையும் பூமியிலிருந்து புறப்பட பண்ண போகிறவர் தாவீதின் ஊரிலே பிறந்தார் என்கிற நற்செய்தி அன்று கொடுக்கப்பட்டது.(ஏசா.26:19)

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையப் போகிற காலம் நிறைவேற போகிறதை அந்த நற்செய்தி அறிவித்தது.(1தீமோ. 2:4)




உண்மையில் தேவதூதர்களால் அன்று அறிவிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கும் நற்செய்தியே!

### ஆனால் அது எல்லோருக்கும் சந்தோஷத்தை கொடுக்கிறதா?






## தேவனுடைய ஜனங்கள் மூலம் அப்படிதான் பிரசங்கிக்க அல்லது அறிவிக்கப்படுகிறதா?



கிறிஸ்துவின் பிறப்பு முதல் இன்று வரை பல வருடங்களாக அநேக ஜனங்கள் மத்தியில் தொனித்துக் கொண்டிருக்கும் இந்த செய்தி தவறுதலாகவும், கவலைக்கிடமாகவுமே புரிந்துகொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டு வருகிறது.



ஏனெனில் ஒரு வகுப்பார், இயேசுகிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார்; அதனால் அவரை அறிந்த, அறியாத எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று கூறுகின்றனர்.



மற்றொரு வகுப்பார், இயேசு கிறிஸ்து எல்லாருக்காவும் தான் மரித்தார். ஆனால், அவரை ஏற்றுக்கொள்கிற; விசுவாசிக்கிற ஜனங்களுக்கு மட்டுமே இரட்சிப்பு என்றும், மற்றவர்களுக்கு இரட்சிப்பு இல்லை எனவும் பிரசங்கிக்கின்றனர்.





ஏனென்றால் “அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பதற்காகவே” (மத்.1:21) இந்த உலகத்திற்கு வந்தார் என்று கூறுகின்றனர்.





இவர்கள் சொல்வது போன்று, அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு மாத்திரம் அவர் இரட்சகர் என்றால்,

**அவரது பிறப்பு எப்படி எல்லா ஜனத்துக்கும் சந்தோஷத்தை கொடுக்கும் நற்செய்தியாக இருக்கும்?**


அல்லது பெத்லகேம் புல்வெளியில் அன்று இயேசுவின் பிறப்பை அறிவித்த தேவதூதர்கள் தேவனுடைய வார்த்தையை மிகைப்படுத்தி அறிவித்துவிட்டார்களா!



மேலும், “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” ( அப். 4:12) என்று சொல்லியிருக்க,



## இயேசுகிறிஸ்துவின் பிறப்புக்கு முன்னும், அவருடைய பிறப்புக்கு பின்னும் அவரை அறியாமல், விசுவாசிக்காமல் மரித்துபோன (பல்லாயிரம் கோடி) ஜனங்களின் நிலை என்ன?





ஆதாமின் சிருஷ்டிப்பு முதல் இன்று வரை பல ஆயிரம் வருடங்களுக்கு மேலாக ஏறத்தாழ 15,000 கோடிக்கும் மேல் மனிதர்கள் வாழ்ந்ததாக கணக்கிடப்படுகிறது. இந்த எண்ணிக்கையில் நியாயமாய் செய்யக்கூடிய மதிப்பின்படி 500 கோடிக்கும் குறைவானவர்களே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்திருப்பதாக நிதானிக்கலாம்.



அப்படியென்றால் இந்த கணக்கின்படி அவரை விசுவாசிக்காமலும், நம்பாமலும் மரணத்திற்குள் பிரவேசித்த மக்கள் 14,500 கோடி பேர் இருக்கிறார்கள்.

இவர்களிலும் இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு ( கி.மு.1 - B.C.1 ந்கு ) முன்னால் வாழ்ந்து மரித்தவர்கள் இயேசுகிறிஸ்துவை ஒருக்காலும் அறிய வாய்ப்பே இல்லை. அவர் நாமம்கூட அவர்களுக்கு தெரியாது. ஏனென்றால், அப்பொழுது கிறிஸ்து பிறக்கவே இல்லை.









அவருடைய பிறப்புக்கு பின்னும் கூட அநேக இடங்களுக்கு சத்தியத்தை பற்றிய அறிவும்; இயேசுகிறிஸ்துவை பற்றிய அறிவையும் முழுமையாக கொண்டு செல்ல சில காலம் பிடித்தது.




இன்னும் பிறந்த பச்சிளங்குழந்தைகள், பிறந்து சில மாதங்களிலேயே நோயினாலும், சில நாடுகளில் பசியினாலும் மரித்து போகின்றன. இந்த குழந்தைகள் இயேசுகிறிஸ்துவை அறியும் பக்குவத்திற்கு முன்பே மரித்துவிட்டனர்.

இவர்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவை அறிந்து விசுவாசிக்காமல் போனவர்கள் அல்ல, அவரை அறியாததினால் விசுவாசிக்காமல் போனவர்கள்.






## இந்த 14,500 கோடி ஜனங்களின் நிலை என்ன?

ஒருவேளை இன்றைய சில கிறிஸ்தவர்களால் பிரசங்கிக்கப்படுவது போல இந்த அறியாத ஜனங்களும், பச்சிளங்குழந்தைகளும், எந்த வித நம்பிக்கையுமின்றி, இரக்கமற்றதும், நித்திய வேதனையுள்ளதுமான நரகத்திற்கு செல்வதற்காகவே தேவனால் படைக்கப்பட்டார்களா?



"உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்க." (அப். 15:18)




## இவர்களுடைய பிறப்பையும், எல்லா சூழ் நிலைகளையும் முன்னறியக்கூடிய சர்வ வல்லமையுள்ள நம் தேவன் இவர்களுக்கென எந்த திட்டத்தையும் வைக்கவில்லையா?



## அல்லது நாம் தேவனுடைய திட்டத்தை புரிந்து கொள்வதில் தவறு செய்கிறோமா?






வேறே சில வகுப்பார், அநேக ஜனங்கள், குழந்தைகள் அறியாமையில் இருப்பதினால் தேவன் அவர்களை தயவாய் மன்னித்து இரட்சிப்பார் என்று சொல்கிறார்கள்.

இது வேதத்திற்கு ஒத்துப்போகிறதா?



## அறியாமை இரட்சிப்புக்கு வழி வகுக்கும் என்று வேதம் போதிக்கிறதா?

அறியாமையிலுள்ள கோடிக்கணக்கான குழந்தைகளும், புறஜாதி சமயத்தினரும் ஆகிய இருவரும் நித்தியமாக கெட்டுபோவார்கள் என்பதை நம்ப அல்லது ஏற்க இயலாத சில இரக்கமுள்ள கிறிஸ்தவர்கள், வேத வாக்கியங்களுக்கு மாறாக பேதைகளையும் அறியாமையில் உள்ளவர்களையும் தேவன் குற்றமுள்ளவர்களாக தீர்க்க மாட்டார் என்றும், அதனால் அவர்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்று வலியுறுத்துகின்றனர்.

இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என கேட்டதற்கு, "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி" என அப்போஸ்தலர்கள் பதிலளிக்கிறார்களே!

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என நமது ஆண்டவர் கூறுகிறாரே!


"இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை"
– அப்.4:12 என்று





**வேத வசனங்கள் கூறியிருக்க, அறியாமையில் உள்ள ஜனங்கள் அதினாலேயே இரட்சிக்கப்படுவார்கள் என நம்புவது அல்லது கூறுவது முற்றிலும் தவறல்லவா?**

அறியாமையினால் இரட்சிக்கப்படுவார்கள் என்றால், விலை மதிப்பில்லா ஆயிரக்கணக்கான உயிர்களை பலிகொடுத்து, கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்து இயேசு கிறிஸ்துவை பற்றியும் சுவிசேஷத்தையும் ஊர்கள் தோறும், நாடுகள் தோறும் போதிப்பதற்கு பதிலாக அவர்களை அறியாமையிலே விட்டுவிடலாமே!




**அப்போது ஏராளமானபேர் இரட்சிக்கப்படுவார்களே!**



எனவே, இரட்சிப்பை அடைவதற்கு அவசியமான இயேசுகிறிஸ்துவையும் சத்திய அறிவை பெறாமல் போனதினால், இந்த இரட்சிப்பை பல்லாயிரம் கோடி ஜனங்கள் இழந்து போவார்களானால்,










"தேவன் அன்பாகவே இருக்கிறார்"
(1யோவா 4:8)

"கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்"
(யாத். 34:6)

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"
(யோவான் 3:16)



**என்ற வசனங்களின் கருத்தை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது?**

தேவன் மனுகுலத்தில் இவ்வளவு அன்பு கூர்ந்தாரென்றால்,



**விசுவாசிகள் இரட்சிக்கப்படுவதற்கு மட்டுமல்ல, எல்லா மனுஷரும் சத்தியத்தைக் கேட்டு இயேசுகிறிஸ்துவை அறிந்து விசுவாசிக்கத்தக்கதாக ஒரு ஏற்பாட்டை செய்திருக்க மாட்டாரா" என்று தோன்றவில்லையா?**


"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறாரே" (1தீமோ.2:4)

இதற்காகவே "பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்" (1யோவான் 4:14) என்று அப்போஸ்தலர்கள் சாட்சி கூறுகிறார்களே!

"தேவனுடைய கிருபையினால் (இயேசுகிறிஸ்து) ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்த்தார்..." (எபி.2:9) என வாசிக்கிறோமே!



**இந்த உலகத்தில் தோன்றி மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிற <u>15,000 கோடி பேருக்காகவும் அவர் மரணத்தை</u> ருசிப்பார்த்திருக்கும்போது, ஏதாவது ஒரு காரணத்திற்காக <u>500 கோடி</u> பேருக்கு மாத்திரமே அவருடைய பலி பலனளிக்கும் என்று நாம் நிதானிப்பது அவருடைய திட்டத்துக்கு மாறாக இருக்கும் அல்லவா?**




உண்மையில் இந்த நற்செய்தியை நாம் முழுமையாக புரிந்து கொள்ள, கர்த்தர் இந்த மனுக்குலத்தின் மீது வைத்துள்ள அன்பையும், அவருடைய நீதி, ஞானம், வல்லமையையும் மற்றும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற சிலுவை மரணத்தின் மூலம் இயேசு கிறிஸ்து கொடுத்த பலியை குறித்தும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

அப்பொழுதுதான் இது எல்லாருக்குமான நற்செய்தி என நாம் உணர முடியும்.

தேவனுடைய அன்பை அவர் முதலாவது சிருஷ்டித்த ஆதாமிலிருந்து அறிய ஏதேனை சற்று திரும்பி பார்க்கும்போது,

முதலாவது பூரண மனிதனையும் அவனது பரிபூரண உடல், மன வலிமையையும், அவனை தனது சாயலாக தேவன் சிருஷ்டித்ததையும் நம் கண்முன் கொண்டுவர வேண்டும்.






அதாவது அன்பு, நீதி, புத்தி, பகுத்தறியும் குணம், ஞாபக சக்தி, நியாயந்தீர்ப்பது, ஒழுக்க இயல்பு, பிரதிபலன் எதிர்பாராது நன்மை செய்தல் போன்ற அனைத்திலும் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்.(ஆதி.1:27)

DECISION MAKING

மனரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் மிக உயர்ந்த நிலையில் "அவன் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டான்..." (சங்.139:14)

தேவதூதர்களுக்கு கூட கொடுக்கப்படாத "சுயாதீனத்தை" மனுஷனுக்கு கொடுத்து அவனை மகிமைப்படுத்தினார்.




# தேவன் மனிதனை இவ்வாறு உயர்ந்த நிலையில் சிருஷ்டித்ததின் நோக்கம் என்ன?




“தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்;...”ஆதி.1:27

இங்கு சாயல் என்பது தோற்றத்தை குறிக்காமல், அவருடைய குணநலன்களை குறிக்கிறதாக இருக்கிறது.

அதாவது, தேவன் தனது அன்பினாலும், நீதியினாலும், ஞானத்தினாலும், வல்லமையினாலும் அண்டசராசரத்தையும் ஆளுகிற இராஜாதி இராஜாவாக இருக்கிறார். அதுபோல மனிதனையும் தனது சாயலாக சிருஷ்டித்து இந்த பூமிக்கும் அதில் நிறைந்திருக்கும் எல்லா சிருஷ்டிகளுக்கும் இராஜாவாக இருக்கும்படி படைக்கப்பட்டான்.












“அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்” (ஆதி.1:26)





தேவன் மற்ற ஜீவன்களையும் சிருஷ்டித்தார். உதாரணமாக மிருகங்களையும் சிருஷ்டித்தார்; அதின் நோக்கம் அது மனிதனுக்கு ஊழியம் செய்து, தங்கள் இனத்தை அபிவிருத்தி செய்துவிட்டு சில காலம் வாழ்ந்து மரித்துவிட வேண்டும் என்பதற்காக.






# ஆனால் மனிதன் பற்றிய நிலை என்ன? அவன் மிருகத்தை போல சாவதற்கு படைக்கப்பட்டானா?

## இல்லை !



ஆதாம் என்றும் நித்திய ஜீவனோடு இருந்து இந்த பூமியை ஆண்டுகொள்ளவே படைக்கப்பட்டான்.

ஆனால் அது நிபந்தனைக்கு உட்பட்டிருந்தது.




அதாவது ஆதாம் தான் என்றும் ஜீவனோடு இருக்க தன் சிருஷ்டிகரை சார்ந்து அவருக்கு கீழ்படிந்திருக்கும் வரையில் ஜீவனோடும், அவர் கட்டளையை மீறும்போது சாகக்கூடியவனாகவும் படைக்கப்பட்டார்.

"..அதை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்......" (ஆதி. 2:17)









எனவே, ஆதாமுடைய ஒவ்வொரு உடல் உறுப்பும் தேய்மானம் அடைந்து அழியக்கூடியதாகவே படைக்கப்பட்டது. அவன் தொடர்ந்து தன் சிருஷ்டிகருக்கு கீழ்படியும்பட்சத்தில், அந்த உறுப்புகள் தேய்மானம் அடையாதபடிக்கு அதை அன்றாடம் சரிசெய்து கொள்ள ஜீவ விருட்சத்தின் கனியை ஏதேனில் வைத்தார்.

அதை தொடர்ந்து புசித்து தன் ஜீவன் என்றும் அழிவை காணாதபடிக்கு நிபந்தனையோடு அவருக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்பட்டிருந்தது.

அவர் கட்டளையை மீறினபோதோ, அவர் இனி ஜீவனை தக்கவைத்து கொள்ள அந்த ஜீவ விருட்சத்தின் கனிகள் அவனுக்கு கிடைக்க கூடாதபடி செய்து மரணத்தை வருவித்தார்.


"இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்டும் என்று,......... தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்" (ஆதி.3:22,23)





# இவ்வளவு அன்புடன் படைக்கப்பட்ட ஆதி பெற்றோர் தவறு செய்வதற்கு வாய்ப்பாக, "நன்மை - தீமை" அறியத்தக்க கனியை ஏதேன் தோட்டத்தில் ஏன் வைக்க வேண்டும்?

தேவன் மனிதனை சிருஷ்டிப்பதற்கு முன்பாக அநேக உயிரற்ற-உயிருள்ள சத்துவங்களை உருவாக்கினார். ஆனாலும் மனிதனை தம் சாயலுக்கடுத்த அறிவுக்கூர்மையான சிருஷ்டியாக உருவாக்கி, இப்பூமியை ஆளுகிறவனாகவும், எது சரி எது தவறு என்று பகுத்தறியும் தன்மையோடும் சிருஷ்டித்தார்.





1. இங்கு "பரிபூரணம்" என்பது சிருஷ்டிகர் - சிருஷ்டி என இருபுறமும் தொடர்புடையதாக உள்ளது. தேவன்(சிருஷ்டிகர்) பரிபூரணமாக சிருஷ்டித்திருந்தாலும், ஆதாம்(சிருஷ்டி) தன்னுடைய பரிபூரணத்தை நிரூபிக்க வேண்டும். அதனால் ஆதாமுக்கு சுயாதீனத்தை கொடுத்து அவருடைய பரிபூரணத்தை பரீட்சித்தார்.





2.மேலும், தன்னால் சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதற்காக மனிதன் அடிமைத்தனமாகவும், அறியாமையில் இயந்திரத்தனமாகவும் தொழுதுகொள்வதை அவர் விரும்பவில்லை.



மாறாக, தன்னை சிருஷ்டித்தவர் யார், அவரது அன்பு எவ்வளவு பெரியது என்பதை உணர்ந்து, அறிவுக்கூர்மையோடும், ஆவியோடும், உண்மையோடும் அவருக்கு கீழ்படிய வேண்டும் என்றே தேவன் விரும்பினார்.


ஒருவேளை நன்மை, தீமை அறியத்தக்க அந்த கனியை ஏதேன் தோட்டத்தில் வைக்காமல், தேவன் மனிதனை நன்மை - தீமை பற்றி அறிந்துகொள்ளும் சக்தியில்லாமலோ அல்லது நன்மையை மாத்திரம் உணர்ந்து கொள்ளும் சக்தியுடையவராகவோ உருவாக்கியிருக்கலாம்.






அவ்வாறு படைத்திருந்தால் மனிதன் ஒரு உயிருள்ள இயந்திரமாக இருந்திருப்பானேயல்லாமல், சிருஷ்டிகருடைய சாயலுக்கு ஒப்பாய் இருந்திருக்க மாட்டார். அவனுக்கு சுயாதீனம் என்ற ஒன்று கொடுக்கப்படாமலே இருந்திருக்கலாம்.

**எனவே அவனுக்கு கொடுக்கப்பட்ட சுயாதீனத்தை கொண்டு, அவனுடைய கீழ்படிதலை அறியும்படிக்கு அந்த "நன்மை - தீமை" அறியத்தக்க கனியை ஏதேன் தோட்டத்தில் வைத்தார்.**





## இவ்வளவு பரிபூரணத்தோடு படைக்கப்பட்டிருந்த ஆதாம், எப்படி தீமையான வழியை தேர்ந்தெடுத்தார்?




முதலாவது காரணம், ஆதாம் தீமை பற்றிய அறிவை, அறிவுரையின் மூலமே (By information) அறிந்திருந்தார். தீமையினால் வரும் விளைவுகளை அவர் அனுபவத்தால் அறிந்திருக்கவில்லை.



தேவ கட்டளையை மீறினால் தண்டிக்கப்படுவோம் என்று அறிந்திருந்தாரே தவிர, அதினால் வரும் பின் விளைவுகளை அவர் ருசிப்பார்க்காததினால் அந்த அறிவுரை விலக்கப்பட்ட கனியைப் புசிக்காமல் இருப்பதற்கு அவருக்கு போதுமானதாக இல்லை.







இரண்டாவதாக, ஆதாம் மனதாலும், ஒழுக்கத்தாலும் பரிபூரணமாக இருந்ததினால் அவர் தன் துணைவியை அதிகதிகமாக நேசித்திருக்க வேண்டும். ஏவாள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டதை ஆதாம் அறிந்தவுடன், ஏவாள் தண்டிக்கப்படப்போவதை குறித்து அவர் சிந்தித்து இருப்பார்.

அவள் தண்டனைக்குட்பட்டு; தான் மீண்டும் தனிமையாக்கப்பட்டு விடுவோமோ என எண்ணி ஆதாம் கவலையடைந்திருப்பார்.





அதனால், ஆதாம் சோர்ந்து போய் ஏவாள் இல்லாமல் தன்னால் வாழமுடியாதென்ற விரக்தி, கட்டளையை மீறி தன்னையும் பாவத்திற்கு உட்படுத்த அவரை வழி நடத்தியிருக்கும்.





## கீழ்படிதலை சோதிக்க வைத்த பரீட்சையில், ஆதாம் சிந்தையால் தோற்ற உடனே அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடாமல் ஏன் தொடர்ந்து பாவம் செய்ய அனுமதித்தார்?




தேவன் முதலில் மனிதனை நன்மையை மட்டும் அனுபவிக்க செய்து, நன்மை சூழ அவனை ஏதேனில் வைத்தார்.

ஆனால் தொடர்ந்து நன்மையை மட்டும் அனுமதித்து, அவனுக்கு பாவம் செய்வதற்கான வாய்ப்பை அனுமதிக்காமல் இருந்திருப்பாரானால், மனிதன் பாவத்தை சந்திக்க நேரிடும்போது, அதை எதிர்க்க முடியாமல் போயிருக்கும்.




அதாவது, மனிதனுக்கு தீமையினால் வரும் பாவ விளைவுகளின் அனுபவம் ஏற்படாததால், புறம்பே இருந்து வரும் தாக்குதல்கள் மற்றும் துர் ஆலோசனைகளையும், தனக்குள்ளேயே எழும் ஆசை இச்சைகளையும் கட்டுப்படுத்த முடியாமல், தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு எதிர்கால வாழ்வே சந்தேகத்திற்கிடமாகும்.








**1**. எப்படியெனில், அதை புசிப்பதால் ஞானம் பெருகும் என்று வெளியிலிருந்து (சாத்தானால்) துர் ஆலோசனை அவளுக்கு கிடைத்தது. அதனால் ஏவாள் ஞானத்தை விரும்பினாள்.

"நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது." – ஆதி.3:5



அதனால், ஏவாளுக்கு கனியை புசிக்க வேண்டும் என்ற விருப்பம் உள்ளுக்குள் எழும்பியது. ஒவ்வொரு முறையும் அவள் அந்த கனியை பார்க்கும்போதும் அதை பறிக்கவும், புசிக்கவும் தொடர்ந்து அவளுக்குள் ஆசை பெருகியது.

"அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, . . . ." - ஆதி.3:6



தீமையின் அனுபவம் ஏவாளுக்கு இல்லாததால், அவளுக்கு கொடுக்கப்பட்ட தீய ஆலோசனையையும், அவளுக்குள் எழுந்த இச்சையையும் அவளால் எதிர்க்க முடியாமல் போனது.

ஒருவேளை பாவம் செய்ய அந்த கனியை புசிக்க அனுமதிக்காமல் இருந்திருந்தால், இவைகளினால் அவள் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருப்பாள். இதனால் அவர்களை அந்த கனியை புசித்து தொடர்ந்து பாவத்திற்குள் பிரவேசித்து தீமையின் அனுபவத்தை அடையும்படி செய்தார்.

**2**. மீறுதலுக்குட்பட்ட உடனே ஆதாமையும் ஏவாளையும் அழித்து, மீண்டும் ஒரு பூரணமான மனிதனை சிருஷ்டித்திருக்கலாம்.

அவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட மனிதனும் தவறு செய்யும்போது மீண்டும் அவனை அழிக்க வேண்டியிருக்கும். இப்படியே இது தொடராதபடிக்கு, ஆதாம், ஏவாளுக்கு பாவத்தை அனுமதித்து, தீமையினால் வரும் விளைவுகளை அறியும்படி செய்தார்.


பின் நன்மையும் தீமையும் பெருகினதால் தன் அனுபவ அறிவால் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்து மதிப்பிடவும், பாராட்டவும் மனிதன் கற்றுக்கொண்டான். (ஆதி.3:22)





## தீமையை அனுபவத்தால் தான் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டுமா?

### காரியங்களை அறிந்து கொள்வதற்கு மூன்று வழிமுறைகள்



### 1. இயல்பாக உள் உணர்வின் மூலம் தம்மில் தாமே அறிதல்

தன்னில்தானே அறிவது என்பது, இயல்பான அறிவின் மூலமாக காரணகாரியத்தை ஆராயாமல் நேரடியாக உணரக்கூடிய நிலைமை. இப்படிப்பட்ட அறிவு தேவனுக்கு மட்டுமே உண்டு.



### 2. கவனித்து பார்த்து அறிதல்

இரண்டாவது, நன்மை - தீமை அறியத்தக்க அறிவானது இயல்பாக அல்லாமல், கூர்ந்து கவனித்தல் மூலம் பெறலாம். இந்த நிலையில் தேவதூதர்கள் இருக்கிறார்கள்(1பேது. 1:12). மேலும், அவ்வாறு மனிதன் அறிவை அடைவதற்கு, தீமையையும் அதனுடைய பலன்களையும் கூர்ந்து கவனிக்கும்படி வேறொரு இடத்தில் தீமை அனுமதிக்கப்பட வேண்டும்.



### 3. அனுபவித்து அறிதல்

மூன்றாவது அனுபவத்தின் மூலம் நேரடியாக அறிவை பெற்றுக்கொள்வது. இதனால், மற்றவர்களுக்கும் முன் உதாரணமாக இருக்கும்படி செய்வது. இதன் மூலம் மனிதன் தீமை அனுபவங்களை கற்றுக்கொள்வதுடன் மற்றவர்களுக்கும் முன் உதாரணமாக, அதாவது தேவ தூதர்களுக்கும், வீழ்ந்துபோன தூதர்களுக்கும் பாடமாக இருக்கும்படி செய்தார்.

“நாங்கள் உலகத்துக்கும், தூதருக்கும் வேடிக்கையானோம்” - 1 கொரி.4:9






## ஆதாம் செய்த தவறுக்கு நாம் ஏன் மரண தண்டனை அனுபவிக்க வேண்டும்?

தேவன் ஆதாமை மட்டுமே முதலாவது சிருஷ்டித்து அவர் ஜீவனோடு இருக்க நிபந்தனை விதித்தார். ஏவாள் உட்பட அவர்கள் பின் சந்ததியார் யாரும் இதை நேரடியாக தேவனிடத்திலிருந்து பெறவில்லை.

மேலும், ஏவாளும் ஆதாமிலிருந்தே உருவாக்கப்பட்டாள். (ஆதி.2:21-23).

ஏவாளை தொடர்ந்து, முழு மனுக்குலமும் அவருக்குள் இருந்து படைக்கப்பட்டது.



“மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் (ஆதாம் என்னும்) ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். - (அப்.17:26)

ஆதாம் மீறுதலுக்குட்பட்டு சாபத்தீர்ப்பை பெற்றவுடன் அவரின் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமாயிருந்த ஏவாளும் அவரோடு தீர்ப்புக்கு உள்ளானாள். அவர்கள் மூலமாய் முழு மனுக்குலமும் பாவமும், பாவத்தினால் மரணத்தீர்ப்பையும் மறைமுகமாக பெற்றனர்.

“இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.” - ரோமர் 5:12





"பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புகொடுத்து;..." 2பேதுரு 2:4

## தேவன் ஆதாமுக்கு தண்டனையாக அவரை மரணத்துக்கு ஒப்புகொடாமல் (வீழ்ந்து போன தூதர்களைபோல)அப்படியே ஜீவிக்க விட்டு வேறு தண்டனை நிறைவேற்றியிருந்தால்?

ஆதாமின் பாவத்தினால் வந்த மரண தண்டனை கடினமானதாக இருந்தாலும், வீழ்ந்து போன தூதர்களைப் பார்க்கிலும் மனிதன் பெற்று கொண்டது மேலான தண்டனையே. எப்படியெனில்,



**1.** பாவம் செய்த தூதர்களை உடனடியாக மரணத்துக்கு ஒப்புகொடாமல், பரிசுத்தரோடு தொடர்பு கொள்ளாதபடிக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். மேலும் அவர்கள் ஒருவரையொருவர் ஆளாமல் மனிதனையே அடிமையாக்கவே செய்கின்றனர்.

ஆனால் அதுபோல, மனிதனை மரணத்திற்கு ஒப்புகொடாமல் விட்டிருந்தால், சற்று சிந்தித்து பாருங்கள். அவனுடைய குறைந்த நாள் ஜீவியத்திலேயே சுயநலம் நிறைந்து, சொத்து சேர்த்து, தன் சக மனிதனை துன்புறுத்தி கொடுங்கோல் ஆட்சி செய்கிறான் என்றால்,







**பொறாமை, வஞ்சகம், அடிமைத்தனம், காமவிகாரம், கொடிய நோய்களை கொண்டு அவனை நூற்றுக்கணக்கான வருடங்கள் உயிரோடு வைத்தால் மனிதனின் நிலை என்னவாகும்?**



ஆபேலின் மீது கொண்ட கோபத்தால் அவனை அழிக்க முற்பட்ட காயீன், அவனை கொல்ல முடியாமல் அவன் சரீரத்தை சேதப்படுத்தியிருந்தால், தனது அங்கங்களை இழந்து ஊனத்தோடு ஆபேல், பல்லாயிரம் வருடங்கள் வாழும் வாழ்க்கையை நினைத்துப்பாருங்கள்.


"...காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்." ஆதி.4:8

**2.** மேலும் தேவதூதர்கள் ஆவிக்குரிய சரீரம் பெற்றதால், அவர்கள் இனப்பெருக்கம் செய்வதில்லை. ஆனால், மனிதன் பரீட்சைக்கு முன்பே பலுகி பெருகும்படிக்கு ஆசீர்வாதம் பெற்றுள்ளான். அதனால் அவனுடைய பாவம் பெருகுவதோடு, அவன் சந்ததியும் சாகாமல் பெருகி இருக்கும் உலகம் எவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் என நினைத்து பாருங்கள்.

"பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதை.... ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்." ஆதி.1:28



**இந்த நிலையில் நாம் கவனிப்போமேயானால், "சாகவே சாவாய்", "பாவத்தின் சம்பளம் மரணம்" என்ற தண்டனை மனிதனுக்கு கொடுக்கப்பட்டதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.**
**சரி,**




# ஆதாம் செய்த பாவத்தினால் மனுக்குலம் அடைந்தது மரணம் மட்டுமா?

ஆதாமிடமிருந்து பெற்ற சாபத்தால் முழு மனுக்குலமும் மரண தண்டனை பெற்றதோடு அல்லாமல், அந்த பாவத்தை செய்வதற்கு முன் ஆதாம் தேவனிடம் பெற்றிருந்த எல்லா சலுகைகள், உரிமைகள், ஆசீர்வாதங்கள் யாவையும் இழந்து போயினர்.

## 1. பரிபூரண சரீரத்தை (ஜீவனை) இழந்துபோனோம்

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்;......." ஆதி.1:27



## 2. சிருஷ்டிகர் உடனான நல்லுறவை இழந்துபோனோம்

"பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்......" ஆதி.3:8

".....அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்." ஆதி.3:8





## 3. ஆரோக்கியமும் ஏராளமுமான உணவை இழந்துபோனோம்

"பின்னும் தேவன்: இதோ, பூமியின்மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது; . ." ஆதி.1:29



## 4. சகல ஜீவ ஜந்துக்களின் மேலும் ஆளுகை போய் அடிமைவாழ்க்கை வாழ்கிறோம்.

"…. நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்." ஆதி.1:28



## 5. எந்த கடினமான வேலையும் இல்லை

"தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று." ஆதி. 2:19

**அவர்கள் தேவைகள் எல்லாவற்றையும் தேவன் பூர்த்தி செய்தார்.**
**இவைகள் எல்லாவற்றையும் நாம் இழந்து போனோம்.**




பரிபூரண மனிதன் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் எவ்வளவு திடகாத்திரமாக இருந்திருந்தால் எந்த சுகாதார, மருத்துவ, அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்திலேயே ஆதாம் 930 வருடங்கள் வாழ்ந்திருப்பான்.



| அந்நாட்களில் வாழ்ந்த சிலரின் வாழ் நாட்கள் (வருடங்களில்) | |
|---|---|
| ஆதாம் | - 930 |
| சேத் | - 912 |
| ஏனோஸ் | - 905 |
| கேனான் | - 910 |
| மகலாலெயேல் | - 895 |
| யாரேத் | - 962 |
| மெத்துசாலா | - 969 |
| லாமேக்கு | - 777 |
| நோவா | - 950 |

மேலும் இந்த மரணத்தீர்ப்பு, “சாவு” என்ற ஒரு வார்த்தையோடு அடங்கிவிடாமல், மனிதனுடைய ஒவ்வொரு பாகத்தையும் மூலங்களையும் சார்ந்ததாக இருக்கிறது. பாவம் அவனது பண்புகளையும், குண நலன்களையும், சரீரத்தையும் படிப்படியாக அரித்து உருமாற்றிவிட்டது.






உள்ளத்தாலும்,
ஒழுக்கத்தாலும்,
உடலாலும்
படிப்படியாக வீழ்ந்து
எலும்பு, தசை,
உள்உறுப்பு என
ஒவ்வொன்றிலும்
அறியக்கூட முடியாத
வியாதிகளால்
துன்பப்படுகிறான்.




ஆனால் கல்வி, மருத்துவம், அறிவியல் வளர்ச்சி பெற்ற தற்காலத்தில் மனிதனின் சராசரி வயது வெறும் 50 ஆக குறைந்துவிட்டது என்றால், அவனது சரீரம் எந்த அளவிற்கு பூரணத்தை இழந்திருக்கிறது.

**The World Current Death Rate**

**Over 1,50,000 People Die Every Day**

Statisticians have calculated the "Mortality rate"for the World to be roughly 0.883 percent. This means that 1 out of every 113 people in the world died last year.

Based on this rate, Here estimate of incidence of deth among people now living in the World

**1.78 deth / sec**

**107 deth / minute**

**6,390 deth / hour**



பிறக்கும்போதே அங்க குறைபாடுகளோடும், மனவளர்ச்சி குன்றியும் பிறக்கும் பிறப்பு எவ்வளவு கொடுமையானது.

மனிதனை செம்மையாக தேவன் படைத்திருந்தும் அவன்,

“அநேக உபாயத் தந்திரங்களை தேடிக்கொண்டான்” (பிரசங்கி.7:29).

“எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்.” (ரோமர் 3:23)

“இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். (சங்கி.51:5) என ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே சாபத்தீர்ப்போடு பிறக்கிறான் என தாவீது கூறுகிறார்.

இவைகளுக்கெல்லாம் காரணம் தனிப்பட்ட பாவம் இல்லை. பாவங்களை பிறக்கும்போதே நம் முற்பிதாக்களிடம் சுதந்தரித்து கொண்டோம்.





## பாவத்தின் சம்பளம் மரணம்... - ரோமர் 6:23

## பாவத்திற்கான சம்பளம் மரணம் என்றால், ஒவ்வொரு மனிதனுக்கும் மரணம் சம்பவிக்கும்போது தன் பாவத்திற்கான தண்டனையை செலுத்திவிடுகிறானே, பிறகு ஏன் மீட்பர்?

கர்த்தர் ஆதாமுக்கு கொடுத்த தண்டனை, அவன் மெல்ல மெல்ல மரணமடைய வேண்டும் என்பது மட்டும் அல்ல.



அந்த மரணம் என்பது ஜீவனற்ற, உணர்வற்ற இனி எப்போதும் உயிர்பெறாத முற்றிலும் அழிக்கப்பட்ட நிலையாகும்.
அதாவது, ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்க வேண்டிய தண்டனை என்னவெனில், அவன் மரணத்தில் இனி என்றென்றும் ஜீவனே இல்லாத நிலையில் தரித்திருப்பதாகும்.

**“பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்” (எசேக்.18:4)**





எனவே பாவத்திற்கான தண்டனையை ஒவ்வொரு மனிதனும் மரித்து செலுத்திவிடுகிறானென்றால், அவன் மீண்டும் உயிர்த்தெழ அவனுக்கு எந்த உரிமையும் இல்லை.



அவன் மீண்டும் ஜீவன் பெறவும், பரிபூரணம் அடையவும், தேவனோடு ஐக்கியம் கொள்ளவும் அவரின் ஆசீர்வாதங்கள் பெறவும் எந்த நிச்சயமும் அவனுக்கு இல்லை.


“மீட்பு” என்பது தெய்வீக தீர்ப்புக்குட்பட்டு சாபத்தின் பிடியிலிருக்கும் மனிதனின் மரணத்தீர்ப்பை நீக்குவது மட்டும் கிடையாது.

அவனை முன்பு இருந்த அதாவது ஏதேன் தோட்டத்தின் நிலைக்கு கொண்டு வந்து, பாவம் உலகத்தில் நுழைவதற்கு முன் அனுபவித்த மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் திரும்ப கொண்டுவருவதேயாகும்.

“....தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் நித்தியஜீவன்” (ரோமர் 6:23)

## இந்த நிலைப்பாட்டில் பார்க்கும்போது, மீட்பர் அவசியமாகிறது.





## மனிதனை மீட்டெடுப்பது தேவனுக்கு கட்டாயமா?

உண்மையில் தனது வார்த்தைக்கு கீழ்படியாமல் போன இந்த மனிதனை முற்றிலும் கைவிட்டிருக்கலாம்.
அதேபோல நாம் முன்பு பார்த்தபடி பாவம் செய்த தூதர்களையும், மனிதர்களையும் கட்டளை மீறிய உடனே அழித்திருந்தால் ஒரு பூரணமற்ற வம்சத்தையே தவிர்த்திருக்கலாம்.



மாறாக தேவ திட்டமானது பூரணமற்ற பாவம் நிறைந்த நிலைமையை சில காலம் விட்டு, இவர்கள் பாதையில் ஓட அனுமதித்து, சாத்தானிலும், தூதர்கள் மற்றும் மனிதனிலும் பாவத்தின் அழிவை விளக்கி காண்பித்து, மீண்டும் மனிதனை தன்னோடு சேர்த்துக்கொள்ளவே அவர் விரும்பினார்.

இதை குறித்து லூக்கா 15 ஆம் அதிகாரத்தில் நமது ஆண்டவர் உவமையாக பேசி இருப்பதை கவனிக்கவும்.

". . . . . உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்.." லூக்கா 15:11-32








சுயாதீனத்தை பெற்ற மனிதன் தீமையை தேர்ந்தெடுத்து வீழ்ச்சிக்குள்ளாவான் என்பதை முன்னறிந்தவராய், தேவன் அவனை அதிலிருந்து மீட்க, தன்னுடைய ஒரேபேறான குமாரனை **"மீட்கும் பொருளாக"** கொடுத்து அன்பு செய்தது முற்றிலும் அவரது ஐசுவரியம் மிக்க இரக்கமே.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."
– யோவான் 3:16

அந்தப்படியே, குமாரனும் பிதாவின் சித்தத்தை மட்டுமே செய்யும்படிக்கு தம்மை முழுமையாக பலிசெலுத்தி முழு மனுக்குலத்தையும் மீட்க தன்னை **"மீட்கும் பொருளாக"** ஒப்புக்கொடுத்தார்.



## என்ன இந்த மீட்கும் பொருள்?



# என்ன இந்த மீட்கும் பொருள்?

**"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே..." – 1தீமோ.2:5,6**

மேற்கண்ட வசனத்தில் இயேசுகிறிஸ்துவின் பலி "மீட்கும் பொருளாக" ஒப்புக்கொடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டிருப்பதை கவனிக்கவும்.

புதிய ஏற்பாட்டில் "மீட்கும் பொருள்" அல்லது "ஈடுபலி" என்பது குறித்து மிக குறைவான விளக்கங்களே தரப்பட்டிருந்தாலும், தெளிவாகவும் உறுதியாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த சொல் மற்றொரு இடத்திலும் இதே அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்." மாற்கு 10:45**

வேதத்தில் அநேக இடங்களில் தவறுதலாக மீட்பு, மீட்பர், மீட்டுக்கொண்டார், மீட்பை, மீட்கும் பொருள் போன்ற ஒரே விதமான தமிழ் வார்த்தைகள் பயன்படுத்தியிருந்தாலும் இவைகளுக்கெல்லாம் ஒரே பொருள் தரும்படி குறிப்பிடப்படவில்லை.





இவை ஒவ்வொன்றும் சூழ்நிலைகளுக்கும், சம்பவத்திற்கும் ஏற்ப பொருள் தரும்படியாக வெவ்வேறான கிரேக்க சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| வசனம் | கிரேக்க வார்த்தை | ஆங்கில வார்த்தை | தமிழ் மொழிபெயர்ப்பு |
|---|---|---|---|
| லூக் 2:38 | LUTROSIS | REDEMPTION | மீட்புண்டாக |
| லூக் 21:28 | APOLUTROSIS | REDEMPTION | மீட்பு |
| வெளி.5:9 | AGORAZO | REDEEMED | மீட்டுக்கொண்டு |
| கலா.3:13 | EXAGORAZO | REDEEMED | மீட்டுக்கொண்டார் |

அந்தப்படி நமது கர்த்தர் இந்த இடத்தில் உபயோகித்த மீட்கும் பொருள் என்பதற்கான கிரேக்க சொல் "ANTI LUTRON" என்பதாகும். இந்த கிரேக்க சொல் மிக துல்லியமான பொருள் உடையது.

இதற்கு "சரியான விலைக்கிரயத்தால் விடுவித்தல்" அல்லது "சரி நிகரான விலை கொடுத்து மீட்டல்" என்று பொருள். இது இரண்டு காரியங்களை உள்ளடக்கியதாக உள்ளது.


1. ஒன்று, சரியான அல்லது சமமான ஈட்டு கிரயம் கொடுக்கப்பட வேண்டும். அதாவது ஒரு பொருளுக்கு சமமான பொருள் அல்லது ஒரு எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை அல்லது ஒரு ஜீவனுக்கு சமமான ஜீவன் விலைக்கிரயமாக, ஈடாக கொடுக்கப்படவேண்டும்.






2. இரண்டாவது, எந்த ஒன்றிற்காக ஈட்டு கிரயம் செலுத்தப்பட்டதோ அதினால் இழந்த எல்லாவற்றையும் விடுவித்துகொள்ளுதல்.









**இங்கு மீட்கும் பொருள் என்பது சமமான விலையையே குறிக்கும் போது, ஒரே மனுஷனாகிய இயேசுகிறிஸ்து எப்படி பல்லாயிரம் கோடி மனிதர்களுக்கு சமமான மீட்கும் பொருளை கொடுக்க முடியும்?**



மனுக்குலம் முழுவதும் பாவம் செய்து இந்த நியாயத்தீர்ப்பை வருவித்து கொள்ளவில்லை. ஒரே மனிதனாகிய ஆதாம் பாவம் செய்து நேரடியாக நியாயத்தீர்ப்பாகிய மரணத்தை பெற்றார். அவர் மூலம் மறைமுகமாக அவருடைய பின் சந்ததியாகிய எல்லாருக்கும் இந்த தீர்ப்பு தொடர்ந்தது.

எனவே நீதியை நிறைவேற்றி, ஆதாமையும் அவர் சந்ததியையும் விடுவிக்க ஆதாமின் ஒரு ஜீவனுக்கு சமமான - ஈடான இன்னொரு ஜீவன் தர வேண்டியதே நியாயமாயிருக்கும்.

"... . ஜீவனுக்கு ஜீவன். ."
(யாத். 21:23-25)






"ஒரே (ஒரே மனிதனாகிய ஆதாமின்) மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே (இயேசுகிறிஸ்துவின் பலியினால்) நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று." ரோமர் 5:18



"ஒருவனுடைய மீறுதலினாலே அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே"ரோமர் 5:17

"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"
1கொரி. 15:22



**எனவே ஈட்டு கிரய பலியின் விதிப்படி பரிபூரண மனிதனாகிய ஆதாம் என்னும் ஒரு மனிதனுக்கு சமமாகவே, இயேசுகிறிஸ்து மனிதனாக வந்து; பலியாக- மீட்கும் பொருளாக தம்மை கொடுத்து, அதன்மூலம் ஆதாமினால் இழந்த ஜீவனையும் அவரால் இழந்த தேவ சாயல்; ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இந்த பல்லாயிரம் கோடி மனிதர்களும் திரும்ப பெரும்படிக்கு செய்திருக்கிறார்.**

# பரலோகத்தில் மகிமையில் நிறைந்த இயேசுகிறிஸ்து, எப்படி பூமியில் இருக்கும் ஆதாமுக்கு சரி நிகராக்கப்பட்டார்?





ஆதாமின் சிருஷ்டிப்பை நாம் முன் பார்த்த வண்ணம் அவர் தேவதூதரிலும் சற்று சிறியவராக அதேவேளையில் ஒரு பரிபூரண மனிதனாக சிருஷ்டிக்கப்பட்டார்.



"நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்." – (சங்கி.8:5)

அந்த ஆதாமுக்கு ஈடாக, சரியான விலைக்கிரயமாக கொடுக்க, தேவனுடைய தற்சொருபமும், அவருடைய வார்த்தையாகவும், ஒரே பேறான குமாரனாகவும் இருந்த நம் இயேசுகிறிஸ்து, பரலோக மகிமையை விட்டு தன்னை தாழ்த்தி மனிதனாக இப்பூமிக்கு வந்தார்.

". . . . தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் . . . . ." – எபி.2:9 நம்மை மீட்டார்.







"சகலமும் அவர் மூலமாய் உண்டாயிருக்க..." (யோவான் 1:3) அவரோ மரியாளின் வயிற்றில் சிறு கருவாக வந்தார்.




ஆதாம் எப்படி மனித சுபாவத்தை பெற்றிருந்தாரோ அதே சுபாவ நிலைக்கு மாற,

"தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார்." (பிலி.2:7)

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்..."தார். (ஏசா.53:12)

பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தவர் ஆதி மேன்மையை விட்டு,

". . . . அவர்களை (மனிதர்கள்) போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். . . . ஜீவகாலமெல்லாம் மரணபயத்திலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படி அப்படியானார்." (எபி. 2:14,15)





# ஆதாமுக்கு ஈடுபலியாக பரலோகத்திலிருந்துதான் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமா?

ஆதாமின் பாவத்திற்கு ஈடுபலியாக மிருக ஜீவன்களை அதாவது ஆடு, மாடுகளை பலி இட முடியாது. ஏனெனில் ஆடு, மாடுகளின் இரத்தம் ஒருபோதும் பாவத்தை போக்காது. இவைகள் மனிதனை விட தரம் தாழ்ந்தவை, இவைகள் மனிதனுக்கு சமமாக முடியாது.

"அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்திசெய்யமாட்டாதே." – எபிரே. 10:4



இப்பூமியிலிருக்கும் மனிதனும் பலிக்கு உகந்தவன் அல்ல. பரிபூரண மனிதனுக்கு ஈடாக மனிதனிலும் ஒருவனும் இல்லை; ஏனெனில், எல்லா மனிதர்களும் பாவத்தில் பிறந்த அபூரணர்கள்.

"ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும்பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே" – (சங்கி.49:7,8)

அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; - (ரோமர் 3:10)



எனவே, பூமியில் இருந்த பரிபூரண மனிதனுக்கு ஈடாக பரலோகத்திலிருந்து ஒருவர் மனித பிறவி எடுத்து விலைக்கிரயம் கொடுக்க வேண்டியதாயிற்று.





# மேலும், பரலோகத்தில் அநேக தூதர்கள் இருக்க, ஏன் இயேசுகிறிஸ்துவை பலியாக அனுப்ப வேண்டும்?

பரலோகத்தில் தேவ அங்கீகாரம் பெற்றுள்ள அநேக தூதர்கள் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து மனிதனுக்காக ஈடுபலியை கொடுக்க காத்திருந்தனர். ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அனுப்பியதற்கான காரணங்களை பார்க்கும்பொழுது,



1. இயேசுகிறிஸ்து, உலகம் சிருஷ்டிப்பதற்கு முன்பதாகவே தேவனோடு, அவருடைய ஒரே பேறான குமாரனாக இருந்ததினாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டதாலும், படைப்பின் துவக்கத்தில் இருந்தே தேவதிட்டத்தை நன்கு அறிந்தவராகவும் இருந்தார். (கொலோ. 1:16, நீதி. 8:22-31)

"அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." யோவான் 1:2,3





**2.** மேலும், அவ்வாறு பலியாக வேண்டுமானால், அவர் பாடுகள் உபத்திரவங்களை சகித்து, தேவன் மனிதர்மேல் கொண்டுள்ள அன்பையும், கருணையையும், இரக்கத்தையும் வெளியரங்கமாக காண்பிக்கிற மிகப்பெரிய பொறுப்பு பெற்றவராகிறார்.

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,.." (எபி.5:8)

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." ரோமர் 5:8



**3.** இவ்வாறாக தேவன் பேரில் தான் வைத்திருக்கிற பயபக்தியையும், விசுவாசத்தையும் காண்பித்து அந்த பலியை நிறைவேற்றுபவர், எல்லா தூதர்களுக்கும் மேலாகவும், சகல துரைத்தனங்கள், அதிகாரங்கள், வல்லமைகள், பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாகவும் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படுவார். (மத்.28:18)

"இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." (பிலி.2:10,11)





**4.** ஒருவேளை வேறே தூதரை அனுப்பும்பட்சத்தில், ஏற்கெனவே பூமியில் மனிதருக்கு உதவுவேன் என்று வந்த தேவதூதர்கள் மனுஷகுமாரத்திகளை தெரிந்து கொண்டு பாவத்திற்குட்பட்டதையும் அதினால் மனிதர்கள் அடைந்த துன்பத்தையும் நாம் அறிவோம்.



"தேவகுமாரர் மனுஷகுமாரத்திகள் சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களை தெரிந்துகொண்டார்கள்" – ஆதி. 6:2



மேலும், இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு சாத்தான் செய்தது போல மீண்டும் தன் சுய கவுரவம், பதவி ஆசை, சுயநலம் ஆகியவற்றிற்கு உட்படவும் வாய்ப்புள்ளது.

"நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே." (ஏசா.14:13:14)

ஆனால் நமது ஆண்டவரோ, பிதாவின் சித்தத்தை எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் செய்து முடித்து தன்னை அனுப்பினவரிடத்தில்,

"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவான் 17:4,5) என்று தாழ்மையோடு ஜெபித்தார்.

இதனிமித்தம் யாரை அனுப்புவேன் என்று கேட்டபோது, "...இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும். . ." ஏசா.6:8 என்றுரைத்த இயேசுகிறிஸ்துவையே இந்த மாபெரும் பணியை செய்ய அனுப்பினார்.



# இயேசுகிறிஸ்துவின் மீட்கும் பொருள்: எல்லாருக்குமான ஜீவன் பெறும் உரிமை



இந்த மீட்கும் பொருள் அல்லது ஈட்டுகிரய பலியில் அடங்கியுள்ள ஒரேயொரு உண்மை என்னவெனில்



ஆதாம் கீழ்படியாமையினால் தன் ஜீவனையும், பூமியில் தான் பெற்றிருந்த சகல உரிமைகளையும் இழந்து தீர்ப்புக்குள்ளானான். நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆதாமுக்கு சரியான விலைக்கிரயமாகி, தனது சிலுவை மரணத்தினால் மாம்ச பிதாவாகிய ஆதாமின் ஜீவனுக்கும் அதனிமித்தம் அவரது வம்சாவழியினராகிய ஒவ்வொரு மனிதனுக்கும் முழுமையான ஈட்டை கொடுத்து எல்லாரும் ஜீவன் பெறும்படி செய்திருக்கிறார்.



இந்த அன்பின் வெற்றியில், ஈடுபலி மட்டுமே தற்போது கொடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ஜீவன் பெற்ற ஒவ்வொரு மனிதரும்; ஆதாமுக்குள் மரித்த ஒவ்வொருவரும் உயிர்த்தெழுப்ப படுவார்கள்.

குழந்தைகள், சிறு பிள்ளைகள், வாலிபர், வயதானவர்கள் என அவரை அறிந்து விசுவாசித்தவர்கள்; விசுவாசிக்காதவர்கள், அறியாது மரித்தவர்கள், மரித்துக்கொண்டிருக்கிற, மரிக்கப்போகிற என அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.



“மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.” – 1கொரி.15:21,22

“ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.” - ரோமர் 5:18



இங்கு, "உயிர்த்தெழுதல் - G-386" என்ற வார்த்தை "அனஸ்டாசிஸ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது. இது **ஜீவனுக்கு திரும்புதல்** அல்லது **எழும்புதல்** என்று பொருள் படும்.



எப்படி, எந்த நிலையில் அவர்கள் சுய நினைவை மரணத்தில் இழந்தார்களோ அதே நிலையில் சுய நினைவு கொடுக்கப்பட்டு மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

"இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; . ." யோபு 19:26,26

**ஆர்வமூட்டும் வகையில் நடக்கப்போகும் இந்த உயிர்த்தெழுதலில் நீதியுள்ளவர்களானாலும் சரி, அநீதி உள்ளவர்களானாலும் சரி அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.**

வரலாற்றின் பக்கங்களில் மனித நேயத்திற்கு எதிராக கொடுமையான குற்றங்கள் செய்து மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் கூட உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.

"நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொண்டிருக்கிறது போல, நானும் நம்பிக்கைகொண்டிருக்கிறேன்" - அப்.24:15

"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்" - யோவான் 5:28





## ஆனால் உயிர்த்தெழுப்பப்படும் அனைவரும் நித்திய ஜீவனை அடைவார்களா?

ஆதாமுக்குள் விழுந்துபோன மனுக்குலம் மரணத்திலிருந்து மட்டுமல்ல தங்கள் அறியாமையிலிருந்தும், அசத்தியத்தின் இருளிலிருந்தும் விடுபட்டு இரட்சிப்படைய வேண்டும் என்பதே தேவ சித்தம்.





"சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." - 1தீமோ.2:4,3

பொதுவாக இரட்சிக்கப்பட வேண்டும் என்றால் முதலாவது ஒருவர் "சத்திய அறிவை" பெற்று பின்பு "இரட்சிக்கப்பட வேண்டும்" என்றே சத்தியம் போதிக்கிறது



ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கு சகல ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் நித்திய ஜீவனோடு இருக்க அவருடைய சுயாதீனத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் பரீட்சை வைக்கப்பட்டது.





அதுபோல இயேசுகிறிஸ்துவால் ஜீவன் பெற்ற அனைவரும், பின்பு அந்த ஜீவனை தக்க வைத்து என்றும் நித்திய ஜீவனோடு இருக்க, தங்களின் தனிப்பட்ட பாவங்களை சுத்திகரிக்க, ஆதாமைப்போல பரிட்சிக்கப்படுவார்கள்.









ஏனென்றால், இயேசுகிறிஸ்துவின் ஈடுபலி ஒவ்வொரு மனிதனின் மேல் வந்த ஆதி பாவத்தை மட்டுமே நீக்கி போட்டது. ஆனால் அவனவனுடைய தனிப்பட்ட பாவங்களை சுத்திகரித்து அவன் பரிபூரணத்துக்கு திரும்ப அவனுக்கு சத்திய அறிவு கொடுக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படும்.


“உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும்.....” (யோவான் 17:17)

சிறு வயதில் மரித்த குழந்தைகள் முதல், இயேசுகிறிஸ்துவை அறியாது மரித்தவர்கள், அறிந்தும் விசுவாசிக்காதவர்கள் என அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் மேலான நாமமும், அவரின் ஈடுபலியும், அதினால் கிடைக்கப்போகிற இரட்சிப்பு பற்றிய சத்திய அறிவு கொடுக்கப்பட்டு







“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை . . . . .”- அப். 4:12

என்று அனைவரும் விசுவாசிக்கத்தக்கதான அறிவு 1000 வருட அரசாட்சியில் எல்லா மனுஷருக்கும் கொடுக்கப்படும்.





அந்த நாள்

“சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்” (ஆபகூக் 2:14)




அங்கு அறியாமையிலும் அசத்தியத்திலும் இருந்த செவிடர்கள் வசனத்தை கேட்கவும், குருடர்கள் சத்தியத்தை பார்க்கவும் செய்வார்கள். அங்கு ஒருவனும் நான் சத்தியம் அறியாதவன், இயேசுகிறிஸ்துவை அறியாதவன் என்று சொல்வதற்கில்லை.

“இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.” (எரேமியா 31:34)



அந்நாட்களில், மனுக்குலம் தீமையின் விளைவை ஏகமாய் ருசிபார்த்ததினால், அவர்கள் பெற்ற அனுபவ அறிவு, தனக்குள் எழும் இச்சைகளையும், வெளியிலிருந்து வரும் துர் ஆலோசனைகளையும் எதிர்த்து, கட்டுப்படுத்தி நன்மையான யாவற்றிற்கும் காரணராயிருக்கிற கர்த்தரின் வார்த்தைக்கு செவி கொடுப்பார்கள்.

1000 வருட அரசாட்சியில் உயிர்த்தெழுந்த யாரெல்லாம் சத்தியத்தை அறிந்து, கர்த்தரை விசுவாசித்து, அதற்கு கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் எல்லாரும் நித்திய ஜீவனை பெற்று கொள்வார்கள்.



## பின் வேதத்தில் சொல்லப்படும் ஆக்கினை யாருக்கு?

“அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.” யோவான் 5:29




பொதுவாக அநேகரால், தவறாக புரிந்துகொள்ளப்படும் வசனங்களில் இதுவும் ஒன்று.
ஏற்கனவே முழு மனுக்குலமும் தனிப்பட்ட பாவத்தினால் அல்லாமல், ஆதாம் செய்த பாவத்தினாலே சாபத்தீர்ப்பை பெற்று தண்டனையாக மரணத்திற்குள்ளாக இருக்கிறார்கள்.

### இவர்களை உயிர்த்தெழ செய்வது, ஜீவன் கொடுத்து மீண்டும் தண்டிப்பதற்காகவா?



ஏற்கனவே வேதனையும், துக்கமும் நிறைந்த மரணத்திலிருந்து மீட்டு இரட்சிக்கவே இயேசு கிறிஸ்து ஜீவனை தந்தார்.

“உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.” யோவான் 3:17



எனவே அறியாதவர்களாகவும், அவிசுவாசிகளாகவும் மரித்த எல்லா மனுஷரும் மீட்கப்பட்டு, அவர்களுக்கு சத்திய அறிவை கொடுத்து, பரீட்சித்து நியாயம் விசாரிப்பதற்காகவே இவர்கள் எழுப்பப்படுவார்கள்.






## அந்த நீதியுள்ள தேசத்திலும் அநியாயம் செய்பவர்களுக்கே தண்டனை!

“துன்மார்க்கனுக்குத் தயை செய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான்; நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்.” ஏசாயா 26:10

வேதாகமம் சொல்லுகிறபடி கிறிஸ்தேசுவுக்குள் தேவன் வைத்திருக்கிற கிருபையை அந்த நீதியுள்ள ராஜ்யத்திலும் மறுதலிக்கிறவர்கள் உண்டு.



இயேசுகிறிஸ்துவால் ஜீவன் பெற்று உயிர்த்தெழுந்த பின்பும் தன்னுடைய பழைய சுபாவத்திலிருந்து மாற மனதில்லாமல் கிடைத்த முழு வெளிச்சத்திற்கு விரோதமாக அன்றும் பாவம் செய்ய முயல்வார்கள்.
(ஆனாலும் முடியாது)

இவர்களே “...ஆக்கினை அடையும்படிக்கு எழுந்தவர்கள்...”



இவர்கள் அனைவரும், “. . . . . இரண்டாம் மரணமாகிய அக்னியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.” - வெளி. 21:8

இவர்களுக்கு மீண்டும் மீட்பே கிடையாது.
இவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனை குறித்து வேதத்தில் அநேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



### கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களோ பூமியை சுதந்தரித்து கொள்வார்கள்.

# அந்நாளில் பூமி மகிழ்ச்சியால் நிரம்பியிருக்கும்!

(ஏசாயா 35:1-10, 65:17-21, 11:5-10)

பூரணமாக்கப்பட்ட மகிமைப்படுத்தப்பட்ட பூமியை கற்பனை செய்து பாருங்கள். பரிபூரணமாக்கப்பட்ட சமுதாயத்தின் சமாதானத்தையும் ஒருங்கிணைப்பையும் கெடுப்பதற்கு எந்த ஒரு பாவத்தின் கறையும் அங்கு இருக்காது!

கசப்பான எண்ணங்களோ, வார்த்தையோ, இரக்கமற்ற பார்வையோ அங்கு இராது!

ஒவ்வொருவருடைய இருதயத்திலிருந்தும் அன்பு ஊற்றாக பொங்கிவந்து, மற்றவர்களது இருதயங்களிலுள்ள அன்பை சந்திக்கும்!

அங்கு நோய் இனி இராது, உடல் வலி, வேதனை, தேய்மானத்தின் அறிகுறி இருப்பதில்லை!

நாம் முன் எப்போதும் கண்டிராத பூரண மனிதனின் அழகு, ஆரோக்கியத்தை எண்ணும்போது அது அதிசயமாகவும், அற்புதமாகவும், ஆனந்தமாகவும் இருக்கும். உள்ளார்ந்த பரிசுத்தமும், பூரண சிந்தையும், பூரண ஒழுக்க சுபாவமும் ஒவ்வொரு மனித முகத்திலும் பிரகாசிக்கும்!

**உலக சமுதாயத்தின் ஒட்டுமொத்த நிலைமையும் இவ்வாறே இருக்கும்!**





இந்த மாபெரிதான திட்டத்தை நிறைவேற்றி, மரணதண்டனையில் இருக்கும் எல்லா ஜனத்தையும் மீட்டு,

அவர்கள் எல்லாருக்கும் சத்தியத்தை அறிகிற அறிவை கொடுத்து, எல்லா மனுஷரும் இரட்சிப்படையவும்

ஏதேன் தோட்டத்தில் இழந்த எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்று, என்றென்றும் நித்திய ஜீவனோடு நம்மை ஜீவிக்க செய்யப்போகிற

உலக இரட்சகர் பிறந்தார் என்று பெத்லகேமின் புல்வெளியில் தேவதூதர்களால் அன்று அறிவிக்கப்பட்ட செய்தி

## எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கும் நற்செய்தியே!



ராஜ்யத்தில் எல்லாருக்கும் இரட்சிப்படைய வாய்ப்பு என்றால்,

**இந்த தீமையான உலகத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவர் சிலுவையை சுமந்து அவருக்காக ஜீவன் கொடுக்கும் உண்மை கிறிஸ்தவர்களுக்கு கிடைக்க போகும் மேன்மை என்ன?**





அவரோடேகூட பாடுகளை சகித்து அவரோடே கூட ஆளுகை செய்ய போகிறவர்கள் யார்?
(2தீமோ.2:11)

ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருந்து 1000 வருடம் கிறிஸ்துவோடுகூட அரசாளப்போகிற சிறுமந்தை வகுப்பார் எவர்கள்?
(வெளி.3:21, 20:6, 1:4,6, லூக்.12:32)





## இந்த கேள்விகள் மட்டும் அல்ல மேலும் உங்கள் சிந்தனைக்கு

# PARABLES

## மத்தேயு.13:31,32

| | |
|---|---|
| கடுகு விதை | சிறியதாக ஆதி சபையானது, 12 அப்போஸ்தலர்களையும், சில சீஷர்களையும் கொண்டு மிக சிறிய அளவில் தொடங்கப்பட்டது. |
| அதை ஒரு மனுஷன் எடுத்து | இந்த இராஜ்யத்தின் வேலை இயேசு கிறிஸ்து மூலம் துவங்கி பின் அவருடைய வழி நடத்துதலின்படி அப்போஸ்தலர்கள் நடத்தினர்(அப்.1:8) |
| நிலம் | உலகம் (மத். 13:38) |
| அது வளர்ந்த போது | சபையின் இயற்கைக்கு மாறான வளர்ச்சி. |
| ஆகாயத்து பறவை | இது ஆகாயத்து பிரபுவாகிய சாத்தானின் ஊழியர்கள். (எபே. 2:2) |
| கிளைகளில் வந்தடைந்தது | இவர்கள் சபை அமைப்பில் முக்கியமான அதிகாரங்களையும், முக்கியத்துவங்களையும் பெற்ற விதம். |



பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை விளக்கும் உவமைகள்(மத்.13:11)





# CONTRADICTION



## முரண்பாடாக தோற்றமளிக்கும் வசனங்கள்



"………அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." – 2பேதுரு 3:10


"இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; – ஏசா. 65:17

"பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்களின்மேல் அதை ஸ்தாபித்தார்." – சங். 104:5

ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது. – பிரசங்கி 1:4

# PROPHECIES

## தீர்க்கதரிசனங்களின் மறைபொருள்கள்






இன்னும் வேதாகமத்தின் ஆழங்களையும் அதிசயங்களையும் உங்கள் முன் கொண்டு வருகிறோம்.

இது முற்றிலும் இலவசமாக ஒவ்வொரு வாரமும் நடத்தப்படும், எங்கள் பரிசுத்த வேத ஆராய்ச்சி பாடசாலையின் மாதிரி புத்தகம்.

வயது வரம்பு, கல்வி தகுதி, கட்டணமின்றி அனைவரும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.




ஒவ்வொரு பாடத்தின் நகல்கள் மற்றும் ஆராய்ச்சி புத்தகங்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புக்கு:**

**0000000000,000000000**





**VELLORE BIBLE STUDENTS**

"Blessing House", No.160, Vallimalai Road, Katpadi,
Vellore - 632007.

9790369256 BibleStudent1874@outlook.com